
## நாம் ஏன் இங்கே இருக்கிறோம்?

2030ல் 4ல் ஒருவர் 65 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பார். எனவே, ஆதரிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு மூத்தோரும் பின்வருவனவற்றுக்கான தேவையான சேவைகளைப் பெறுவதை உறுதி செய்வதே நமது பணி:



ஆரோக்கியமாக மூப்படைதல்



சரியான நேரத்தில் தரமான பராமரிப்புக்கான அணுகலைப் பெறுதல்



அவர்கள் விரும்பியபடி பங்களித்தல்



சமூகத் தொடர்புகளை உருவாக்கி வலுப்படுத்துதல்

## மூத்தோருக்கு எப்படிச் சேவை செய்வது?

- மூத்தோர் தலைமுறை அலுவலகம் (SGO) மற்றும் சமூகக் கூட்டாளர்களுடன் சேர்ந்து மூத்தோரின் சுயவிவரம் மற்றும் தேவைகளைக் கண்டறிய நாங்கள் பணியாற்றுகிறோம்.
- மூத்தோரின் தேவைகளைச் சிறந்த முறையில் ஆதரிக்க/கண்காணிப்பதற்காகப் பல ஆணையங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் தொடர்ச்சியான பராமரிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்
- மேலும், அனைத்து மூத்தோரும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ உதவுவதற்கும், அவர்களின் வயதுக்கு ஏற்ப அவர்களின் பேரார்வங்களை ஆதரவளிப்பதற்கும் ஒரு தொகுப்புத் திட்டங்களை வழங்குவதன் மூலம் நாங்கள் தலையீடுகளை மேற்கொள்கிறோம்.

## சமூகத்தில் உள்ள துடிப்பான முதுமை நிலையங்ககளுடன் இணைந்துப் பணியாற்றும் பிற கூட்டாளர்கள்:

- தேசிய முகமைகள்
- சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்குநர்கள்
- உள்ளூர் சமூகக் கூட்டாளர்கள்

உங்களுக்கு அருகிலுள்ள துடிப்பான முதுமை நிலையத்தைப் பார்வையிடவும்:

மேலும் அறிய இங்கே ஸ்கேன் செய்யவும்.

active ageing CENTRE
SUPPORTED BY MOH AND AIC

active ageing CENTRE (CARE)
SUPPORTED BY MOH AND AIC

In support of
Age Well SG

# துடிப்பான முதுமை நிலையம்

# வாருங்கள்!

## சுறுசுறுப்பாக, ஆரோக்கியமாக மற்றும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.





## அணுக வேண்டிய இடம்

துடிப்பான முதுமை நிலையம் (AAC) என்பது ஒரு சமூக பொழுதுபோக்கு மையமாகும், இது புவியியல் பகுதியில் உள்ள அனைத்து மூத்தோரும் அவர்களின் சமூக மற்றும் ஆரோக்கியம் தொடர்பான விஷயங்களுக்குச் செல்ல வேண்டிய இடமாகச் செயல்படுகிறது.

துடிப்பான முதுமை நிலையம் (கேர்) பலம் குறைந்த மூத்தோருக்குப் பகல்நேரப் பராமரிப்பு மற்றும் சமூக மறுவாழ்வு போன்ற கூடுதல் பராமரிப்புச் சேவைகளை வழங்குகிறது. சிங்கப்பூர் முழுவதும் தற்போது 200க்கும் மேற்பட்ட துடிப்பான முதுமை நிலையங்கள் மற்றும் துடிப்பான முதுமை நிலையங்கள் (கேர்) உள்ளன, இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றன.

## எங்கள் கதவுகள் திறந்தே இருக்கும்

அக்கம்பக்கத்தில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சிங்கப்பூரர்கள் மற்றும் நிரந்தர குடியிருப்பாளர்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.

## துடிப்பான முதுமை நிலையத்தின் மூலம் நீங்கள் பயனடையக்கூடிய சேவைகள்

சமூகத்தில் உள்ள மூத்தோரை கரோக்கி அமர்வுகள், கலைகள் மற்றும் கைவினைப் பயிற்சிகள், இசை வகுப்புகள், உடற்பயிற்சி வகுப்புகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு விதமான செயல்பாடுகளில் ஈடுபடுத்தும் சேவைகளின் தொகுப்பை துடிப்பான முதுமை நிலையம் வழங்குகிறது.



கூடுதல் சமூக ஆதரவு தேவைப்படும் மூத்தோருக்கான நட்புறவு சேவைகளும் உள்ளன; அத்துடன் தேவைப்படும்போது பராமரிப்பு சேவைகள் மற்றும் நிதி உதவிக்கான பரிந்துரைகளையும் பெறுகின்றன.

இன்னும் இருக்கிறது! மையத்தில் தன்னார்வத் தொண்டு செய்ய விரும்பும் மூத்தோரையும் வரவேற்கிறோம், உதாரணத்திற்கு, இவர்கள் மையச் செயல்பாடுகளில் உதவலாம், மூத்தோருடன் நட்பு கொள்ளலாம் அல்லது தேவைப்படும் மூத்தோருக்கு உதவி செய்யலாம்.







## வழங்கப்படும் சேவைகள்:

**1 நலமான மற்றும் சுறுசுறுப்பான மூத்தோருக்குத் துடிப்பான மூப்படையும் காலம்**

- செயலில் உள்ள மூப்படைதல் திட்டங்களை வழங்குதல் மற்றும்/அல்லது மூத்தோருக்குப் பரிந்துரைத்தல்.
- தன்னார்வத் தொண்டு மற்றும்/அல்லது சிறு வேலைகளை ஊக்குவித்தல்.

**2 சமூக வட்டாரங்கள் இல்லாத அல்லது வரையறுக்கப்பட்ட சமூக வட்டாரங்கள் கொண்ட மூத்தோருடன் நட்புறவு கொள்ளுதல்**

- வீட்டு வருகைகள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் மூத்தோருக்கு ஆதரவு வழங்குதல்.

**3 பராமரிப்புச் சேவைகளுக்கான தகவல் மற்றும் பரிந்துரை**

- தொடர்புடைய திட்டங்கள், மானியங்கள் மற்றும் ஆதரவு பற்றிய தகவலை வழங்குதல் மற்றும்/அல்லது பராமரிப்புச் சேவைகளுக்கு மூத்தோருக்குப் பரிந்துரைகளை நடத்துதல்.

**4 சமூக மற்றும் வாழ்க்கை முறை தலையீடுகளுக்கான சமூக இணைப்பு**

- சமூகத்தில் மையம் மற்றும்/அல்லது பிற நிறுவனங்களால் (அவர்களது பதிவுசெய்யப்பட்ட மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்டபடி) வழங்கப்படும் செயலில் உள்ள மூப்படைதல் திட்டங்களில் பதிவுசெய்து பங்கேற்க மூத்தோருக்கு உதவுதல் மற்றும் அதிகாரம் அளித்தல்.

**5 சமூகப் பரிசோதனை**

- மூத்தோருக்கு அவர்களின் முக்கிய உயிராதார அறிகுறிகளை (மருத்துவர் பரிந்துரைத்தபடி) அளவிட உதவுதல்.
- உடல்நலம் மற்றும்/அல்லது செயல்பாட்டுப் பரிசோதனையை வழங்க சமூகம் அல்லது சுகாதாரப் பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.